THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 13th February 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

First Five-Year Plan

* 281 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) what schemes were started under the First- Five-Year Plan which remained unfinished in 1957–58 in South Arcot district and in which places;

(*b*) the amount allotted for them ; and

(*c*) the amount spent?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*c*) The Cuddalore Water Supply Improvement Scheme and the Tindivanam Water Supply Scheme are the important schemes in the South Arcot district which are carried over to the Second Five-Year Plan and which remained unfinished in 1957–58. The estimated cost of the schemes is Rs. 26·34 lakhs and Rs. 17·34 lakhs respectively. The expenditure so far incurred on them was Rs. 23·26 lakhs and 16·72 lakhs respectively.

SRI M. JAGANNATHAN : May I know at what stage the protected water-supply scheme of the Tindivanam Municipality is now?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, from the financial figures available, I find that out of the estimated cost of Rs. 17·34 lakhs, a sum of Rs. 16·72 lakhs has already been spent. So, I suppose it should be in the closing stages.

SRI S. NAGARAJA MONIGAR : இப்படித் தனித்தனியாக ஜில்லாக்களுக்குப் புள்ளி விவரங்கள் கேட்கின்றபோது அளிப்பதைவிட, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நடந்தவற்றைத் தெரிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஏதாவது வெளியீடு வெளியிடப்பட்டிருக்கிறதா ? அப்படி வெளியிட்டால் நன்றாக இருக்கும் அல்லவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு ஜில்லாவைப் பொறுத்த வரையிலும், அந்தந்த ஜில்லாவிலே நடந்துவரக்கூடிய திட்டங்களைப்பற்றி வெளியிட்டு இருக்கிறது.

[13th February 1959

SRI A. GOVINDASAMY : திண்டிவனத்தில் வெய்யில் காலங்களிலே குடிதண்ணீருக்குக் கஷ்டம் அதிகம் இருப்பதால், இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழில் தனியாகச் சொல்லவேண்டும் போலிருக்கிறது. திண்டிவனம் குடி தண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 17.34 லட்சம். அதில் ரூ. 16.72 லட்சம் செலவழிக்கப்பட்டு, அந்தத் திட்டம் முடியக் கூடிய கட்டத்தில்தான் இருக்கிறது. கனம் அங்கத்தினர் புதிதாகச் சொல்லி; அதன் பேரில் அரசாங்கம் அதை முடிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. திட்டம் முடியக்கூடிய கட்டத்தில் இருக்கிறது.

SRI K. R. VISWANATHAN : இந்தத் திட்டங்கள் முடிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிந்துகொண்டிருக்கிறது. முடிக்கப்படாமல் இல்லை.

Second Five-Year Plan

* 282 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Collector, Coimbatore, submitted any proposals for the Second Five-Year Plan for the Coimbatore district in 1956;

(*b*) if so, the cost thereof; and

(*c*) how far they have been implemented?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A District Plan for Coimbatore district was prepared by the Collector of Coimbatore in 1955. It embodied schemes sponsored at the State level and by District Planning Board and Local Planning Committees to be implemented during the Second Five-Year Plan, Third or Fourth.

(*b*) 49·19 crores.

(*c*) Schemes costing 11·89 crores will be implemented during the Second Five-Year Plan.

SRI N. K. PALANISAMI : கலெக்டர் கொடுத்த திட்டத்தைப் பூராவும் சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்களா ? அப்படியானால், பூராவும் நடத்திவைப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 49.19 கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 11.89 கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாக்கித் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயோ நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயோ எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

SRI P. G. MANICKAM : கலெக்டரால் அனுப்பப்பட்ட திட்டங்களில் இன்னும் ஏதாவது வேலைகள் செய்யப்படாமல் இருந்தால், திட்டப்படி தொகை சாங்ஷன் செய்யப்படாமலிருந்தால், அந்தத் திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்வதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?